**APRIL 2021** **62508/CZ22A/BS22A/AY22A**

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define - Independent Branch.

   சார்பு இல்லா கிளை - வரையறு.

2. What is Petty Expenses?

   சில்லரை செலவுகள் என்றால் என்ன?

3. What is Goods-in-Transit?

   இடம் பெயர்தலிலுள்ள சரக்கு என்றால் என்ன?

4. What are Departmental Accounts?

   துறைவாரி கணக்குகள் என்றால் என்ன?

5. Give two examples for expenses which cannot be apportioned in Departmental Accounts.

   துறை கணக்குகள் எதன் அடிப்படையிலும் ஒதுக்கீடு செய்ய இயலாத செலவுகளுக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

6. State any two difference between Branch and Department.

   கிளைக்கும் துறைக்கும் இடையேயான வேறுபாடுகள் இரண்டு கூறுக.

7. What is Fluctuating Capital?

   மாறுபடும் முதல் என்றால் என்ன?

8. What is Capital Ratio?

   மூலதன விகிதம் என்றால் என்ன?

9. What is Realisation Account?

   தீர்வு கணக்கு என்றால் என்ன?

10. What is Dissolution of a Firm?

    ஒரு நிறுவனக் கலைப்பு என்றால் என்ன?

11. Define Indian Accounting Standards.

    இந்திய கணக்கியல் தரநிலை - வரையறு.

12. List out any two role of IFRS.

    பன்னாட்டு கணக்கியல் தர நிலையில் ஏதேனும் இரண்டு பங்கினை பட்டியலிடுக.

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. The following information relates to Vellore Branch.

| | Rs. |
|---|---|
| Stock on 1.1.2019 | 11,200 |
| Debtors on 1.1.2019 | 6,300 |
| Goods sent to branch | 51,000 |
| Sales at branch : | |
| Cash | 25,000 |
| Credit | 39,000 |
| Cash sent to branch for | |
| Rent | 1,500 |
| Salaries | 3,000 |
| Petty cash | 500 |
| Cash received from debtors | 41,200 |
| Stock on 31.12.2019 | 13,600 |

Prepare branch account for the year 2020.

வேலூர் கிளை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| 1.1.2019 -ல் சரக்கிருப்பு | 11,200 |
| 1.1.2019-ல் கடனாளிகள் | 6,300 |
| கிலைக்கு அனுப்பிய சரக்கு | 51,000 |
| கிளையின் விற்பனை : | |
| ரொக்கம் | 25,000 |
| கடன் | 39,000 |
| கிளைக்கு அனுப்பிய ரொக்கம் : | |
| வாடகை | 1,500 |
| சம்பளம் | 3,000 |
| சில்லறை ரொக்கம் | 500 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 41,200 |
| 31.12.2019 -ல் சரக்கிருப்பு | 13,600 |

கிளை கணக்கினை 2020-ம் ஆண்டுக்கு தயார் செய்க.

14. Write a note on 'Inter-Departmental Transfer'.

துறைகளுக்கு இடையேயான மாற்றம் பற்றி ஒரு குறிப்பு வரைக.

15. A company's departmental sales were X Rs. 20,000, Y - Rs. 18,000 and Z - Rs. 16,000 whose gross profit ratio is 40%, 30% and 20% on sales respectively. Advertisement expenses Rs. 6,750 which is to allocated on the basis of sales and total general expenses for the period (including those relating to other departments) were Rs. 5,400 on the total turnover of Rs. 1,08,000. Prepare Departmental Profit and Loss Account.

ஒரு நிறுமத்தின் துறைவாரி விற்பனை X - ரூ. 20,000, Y - ரூ. 18,000 மற்றும் Z - ரூ. 16,000. இதன் மொத்த லாப விகிதம் விற்பனை மீது முறையே 40%, 30% மற்றும் 20% விற்பனை விகிதப்படி பகிர வேண்டிய விளம்பரச் செலவுகள் ரூ. 6,750 மேலும் இக்கால கட்டத்தின் மொத்த பொதுச் செலவுகள் (மற்ற துறைகள் செலவுகளையும் சேர்த்து) ரூ. 5,400 ஆனது மொத்த விற்பனை ரூ. 1,08,000ற்கு உரியது. துறைவாரி இலாப நட்டக் கணக்கு தயாரிக்க.

16. Calculate Goodwill at three years purchase of last five years' average profits. The Profit were.

2015 - Rs. 96,000

2016 - Rs. 14,400

2017 - Rs. 20,000

2018 - Rs. 6,000

2019 - Rs. 10,000.

கடந்த ஐந்து வருட சராசரி இலாபத்தில் மூன்று வருட கொள்முதல் அடிப்படையில் நற்பெயர் கணக்கிடுக. இலாபங்கள் பின்வருமாறு.

2015 - ரூ. 96,000

2016 - ரூ. 14,400

2017 - ரூ. 20,000

2018 - ரூ. 6,000

2019 - ரூ. 10,000.

17. What do you mean by Piecemeal Distribution?

துண்டு துண்டாக விநியோகம் செய்தல் பற்றி நீவிர் அறிவது என்ன?

18. Ram, Rahim and Suresh share profits in the ratio of 3:2:1 on 31.12.2019, their balance sheet was as follows.

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Creditors | 12,000 | Machinery | 25,000 |
| Capital reserve | 3,000 | Stock | 11,000 |
| Capital : | | Debtors | 9,500 |
| Ram | 20,000 | Goodwill | 13,000 |
| Rahim | 15,000 | Cash | 1,500 |
| Suresh | 10,000 | | |
| | 60,000 | | 60,000 |

On the above date, the firm was dissolved. The assets were realised except cash Rs. 60,000. The creditors were settled at Rs. 11,500. Dissolution expenses amounted to Rs. 800. Give necessary Ledger Accounts.

ராம், ரஹிம் மற்றும் சுரேஷ் ஆகியோர் லாபத்தை 3:2:1 என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொள்ளும் கூட்டாளிகள் 31.12.2019 அன்று இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 12,000 | இயந்திரம் | 25,000 |
| பொதுக்காப்பு | 3,000 | சரக்கிருப்பு | 11,000 |
| மூலதனம் : | | கடனாளிகள் | 9,500 |
| ராம் | 20,000 | நற்பெயர் | 13,000 |
| ரஹிம் | 15,000 | ரொக்கம் | 1,500 |
| சுரேஷ் | 10,000 | | |
| | 60,000 | | 60,000 |

மேற்கூறிய தேதியில் கூட்டாண்மை கலைக்கப்பட்டது. ரொக்கம் தவிர சொத்துக்கள் விற்றது ரூ. 60,000. கடனீந்தோர்களுக்கு ரூ. 11,500 செலுத்தப்பட்டது. கலைப்புச் செலவுகள் ரூ. 800 ஆகும். தேவையான பேரேட்டு கணக்குகளைத் தருக.

19. What are the objectives and uses of Financial Statements for users?

நிதி அறிக்கையின் நோக்கங்கள் மற்றும் பயன்கள் யாவை?

SECTION C — (3 × 10 = 30 marks)
Answer any THREE questions.

20. A Trichy head office sent goods to Karur Branch at 25% profit over cost. From the following details, prepare necessary ledger account in the books at Head Office under Stock and Debtors System.

| | Rs. |
|---|---|
| Opening stock of goods at branch at invoice price | 20,000 |
| Goods sent to branch at invoice price | 90,000 |
| Loss of goods in transit at invoice price | 6,000 |
| Pilferage at branch at the cost of branch | 1,200 |
| Closing stock at branch at its cost to branch | 16,000 |
| Sales at branch | 1,05,000 |
| Salaries and wages at branch | 6,000 |
| Other expenses at branch | 3,000 |

The branch received Rs. 4,000 from insurance company in settlement of the claim for the loss of goods in transit.

ஒரு திருச்சி தலைமை அலுவலகம் கரூர் கிளைக்கு சரக்குகளை அடக்கத்திற்கு மேல் 25% இலாபத்தில் அனுப்புகிறது.

பின்வரும் விவரங்கள் கொண்டு தலைமை அலுவலக ஏடுகளில் சரக்கு மற்றும் கடனாளிகள் முறையில் தேவையான பேரேட்டுக் கணக்குகள் தருக.

| | ரூ. |
|---|---|
| கிளையில் தொடக்க சரக்கிருப்பு இடாப்பு விலையில் | 20,000 |
| கிளைக்கு அனுப்பிய சரக்கு இடாப்பு விலையில் | 90,000 |
| சரக்கு இடமாற்றத்தில் நட்டம் இடாப்பு விலையில் | 6,000 |
| கிளையில் சிறு களவு நட்டம் கிளையின் அடக்க விலையில் | 1,200 |
| கிளையில் இறுதிச் சரக்கிருப்பு கிளையில் அடக்க விலையில் | 16,000 |
| கிளையில் விற்பனை | 1,05,000 |
| கிளையின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 6,000 |
| கிளையின் இதரச் செலவுகள் | 3,000 |

சரக்கு இடமாற்றத்தின் நட்டத்திற்கான கோரிக்கையின் தீர்வு காப்பீட்டு நிறுமத்திடமிருந்து கிளை பெற்றது ரூ. 4,000.

21. What are the advantages and disadvantages of Departmental Accounting?

துறைவாரிக் கணக்கின் நன்மைகள் மற்றும் தீமைகள் யாவை?

22. A, B and C are partners sharing profits and losses in the ratio of $\frac{1}{3};\frac{1}{2};\frac{1}{6}$ respectively. Their balance sheet as on 31.12.2019 was as follows:

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Creditors | 25,000 | Building | 50,000 |
| Loan | 15,000 | Machinery | 40,000 |
| Reserve Fund | 16,000 | Furniture | 10,000 |
| Capital A | 30,000 | Stock | 25,000 |
| B | 40,000 | Debtors -18,000 | |
| | | (–)500 | 17,500 |
| C | 25,000 | Cash | 8,500 |
| | 1,51,000 | | 1,51,000 |

C retires on 31.12.2019 subject to the following conditions:

(a) A goodwill A/c is created in the books for Rs. 24,000

(b) Machinery to be depreciated by 10%

(c) Furniture to be depreciated by 5%

(d) Stock to be appreciated by 15% and Buildings to be appreciated by 10%

(e) Reserve for doubtful debts is to be realised to Rs. 2,000

Give necessary Ledger Accounts and show the Balance Sheet of the Newly constituted firm.

A, B மற்றும் C இலாப நட்டங்கள் முறையே $\frac{1}{3};\frac{1}{2};\frac{1}{6}$ விகிதங்களில் பகிர்ந்து கொள்ளும் கூட்டாளிகள் ஆவர். 31.12.2019 அன்று அவர்களின் இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர்கள் | 25,000 | கட்டிடம் | 50,000 |
| கடன் | 15,000 | இயந்திரம் | 40,000 |
| காப்புநிதி | 16,000 | நாற்காலி | 10,000 |
| முதல் : A | 30,000 | சரக்கிருப்பு | 25,000 |
| B | 40,000 | கடனாளிகள் -18,000 | |
| | | (–)500 | 17,500 |
| C | 25,000 | ரொக்கம் | 8,500 |
| | 1,51,000 | | 1,51,000 |

கீழ்க்காணும் நிபந்தனைகளின் அடிப்படையில் 31.12.2019 அன்று கூட்டாண்மையில் இருந்து C விலகினார்.

(அ) ஏடுகளில் ரூ. 24,000-க்கு நற்பெயர் கணக்கு உருவாக்கப்பட்டது

(ஆ) இயந்திரத்தின் மீது 10% தேய்மானம் செய்யப்பட்டது

(இ) நாற்காலி மீது 5% தேய்மானம் செய்யப்பட்டது

(ஈ) சரக்குகள் மீது 15% மற்றும் கட்டிடம் மீது 10% விலை உயர்வு செய்யப்பட்டது

(உ) ஐயக்கடன்கள் மீதான காப்பு ரூ. 2,000 அதிகப்படுத்தப்பட்டது.

தேவையான பேரேட்டுக் கணக்குகளைத் தந்து புதிய கூட்டாண்மையின் இருப்புநிலைக் குறிப்பைத் தயார் செய்க.

23. Following is the Balance Sheet of X, Y and Z as at 31.12.2018 :

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Capital : X | 20,000 | Cash | 10,400 |
| Y | 10,000 | Debtors | 12,000 |
| Z | 10,000 | Stock | 8,000 |
| Reserve | 6,400 | Plant | 12,000 |
| Creditors | 4,000 | Goodwill | 8,000 |
| | 50,400 | | 50,400 |

Z died on 14.3.2019 under the terms of Partnership Deed the executors of a deceased partner were entitled.

(a) Amount standing to the credit partner's capital A/c.

(b) Interest on capital at 5% per annum.

(c) Share of goodwill on the basis of twice the average of the past three years profits, and

(d) Share of profits from the closing of the last financial year to the date of death on the basis of the average of three competed year's profits before the death.

Profit for 2017, 2018 and 2019 were respectively Rs. 12,000, Rs. 14,000 and Rs. 16,000. Profits were shared in the ratio of capitals.

Draw up Z's A/C to be rendered to his Executors.

31.12.2018 அன்று X, Y மற்றும் Z ஆகியோரின் இருப்புநிலை குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் : X | 20,000 | ரொக்கம் | 10,400 |
| Y | 10,000 | கடனாளிகள் | 12,000 |
| Z | 10,000 | சரக்கிருப்பு | 8,000 |
| காப்பு | 6,400 | பொறி | 12,000 |
| கடனீந்தோர் | 4,000 | நற்பெயர் | 8,000 |
| | 50,400 | | 50,400 |

14.3.2019 அன்று Z இறந்துவிட்டார். கூட்டாண்மை ஒப்பந்தப்படி காலமான கூட்டாளியின் நிறைவேற்றுபவருக்கு உறித்தராவன :

(அ) கூட்டாளியின் முதல் க/கு –ல் வரவில் உள்ள தொகை

(ஆ) முதல் இருப்பிகள் மீது வட்டி ஆண்டிக்கு 5%

(இ) கடந்த மூன்றாண்டு இலாபங்களின் சராசரியின் பங்கு இருமடங்கு என்ற அடிப்படையில் நற்பெயரின் பங்கு

(ஈ) இறப்பிற்கு முன் முழுவதும் முடிந்த மூன்றாண்டு இலாபங்களில் சராசரியை அடிப்படையாக கொண்டு கடந்த நிதியாண்டு இறுதியிலிருந்து இறப்பு தேதி வரையிலான இலாபத்தில் பங்கு.

2017, 2018 மற்றும் 2019 –ன் இலாபங்கள் முறையே ரூ. 12,000, ரூ. 14,000 மற்றும் ரூ. 16,000 இலாபங்கள் முதல்கள் விகிதத்தில் பங்கிடப்பட்டன.

நிறைவேற்றுபவருக்கு அளிக்க வேண்டிய க/கு வரைக.

24. Distinguish between Indian Accounting Standard and FFRS.

இந்திய கணக்கியல் தரநிலைகளுக்கும் சர்வதேச கணக்கியல் தரத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை?